தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத்தொடர்.)

செவ்வாய்க்கிழமை, 1984 மார்ச் 13.

மாசி 30, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Trainees in Teacher Training Institute.

* 82 *Q.*—DR. T. R. JANARTANAM (on behalf of THIRU P. R. Thomas) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Trainees in the Teacher Training Institutes in Madurai and Ramanathapuram Districts were on fasting on 19th September 1980 in front of the Office of the Chief Educational Officer, Madurai ; and

(*b*) if so, the action proposed to be taken on their demands?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு விட்டன.

குடும்ப ஓய்வூதியம்.

* 83. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆசிரியர்கள் குடும்பங்களுக்கு வழங்கப்படும் குறைந்த பட்ச குடும்ப ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி வழங்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

[1984 மார்ச் 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1—4—1982-லிருந்து ஆசிரியர்கள் உட்பட எல்லாப் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் குறைந்த பட்ச குடும்ப ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியமான ரூ. 125 கூட குறைவாகக் கருதப்படுகிற காரணத்தால், அதை மேலும் உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைப்பற்றி அமைய இருக்கிற ஊதியக் குழு பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக ஓய்வூதியம் பெறுகிறவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் வேலை செய்கிற காலத்தில் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் பாதியைக் கொடுக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்த அடிப்படையில் ஆசிரியர்களுக்கும் அவர்கள் பெற்ற ஊதியத்தில் பாதித் தொகையை ஓய்வூதியமாக அளிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, குடும்ப ஓய்வூதியச் சலுகை அரசு அல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கு 1—4—1962 முதல் தரப்பட்டுள்ளது. அதற்கு முன்னால் ஓய்வு பெற்றால் அல்லது அதற்கு முன்பு பணியில் இருந்தபோது இறந்துவிட்டால், அத்தகைய ஆசிரியர்களுடைய குடும்பத்திற்கு அரசாணை நிலை எண் 748, நிதி (ஊதியக் குழு), நாள் 26—5—1979-ல் அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டுள்ள சலுகைகள் யாவும் வழங்கிட அரசாணை நிலை எண் 465, கல்வித் துறை, நாள் 13—3—1980-ல் வழிவகை செய்யப்பட்டது. தற்போது நிதித் துறையால் வழங்கப்பட்டுள்ள அரசாணை நிலை எண் 169, நாள் 23—2—1982 படி 1—4—1982-லிருந்து குறைந்த பட்ச ஓய்வூதியம் ரூ. 100-லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது குறைந்த பட்ச ஓய்வூதியம் தான். இதற்குக் கீழே யாருக்கும் ஓய்வூதியம் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS